# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 444/2024

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-3/PW-3 |
| Name | : முருகேஷ்வரி |
| Father/Husband's Name | : முருகானந்தம் |
| Village | : மறைமலைநகர் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21.07.2025.

**முதல் விசாரணை–**

கடந்த 08.08.2023 ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை சுமார் 11 மணியளவில் நானும் எனது கணவரும் கோவிலுக்கு சென்றிருந்தோம். எனது கணவருக்கு எனது மகள் கௌசிகா போன் செய்து எனது மகன் லோகேஷ்ராஜை தினமும் நாங்கள் வைத்திருக்கும் கடையின் வழியாக நாயை அழைத்து வரும் நபர் எனது மகனை அடித்துவிட்டதாக கூறினார். அவர் தாக்கியதால் எனது மகனுக்கு உடலில் காயம் ஏற்பட்டு அதிகமான இரத்தப்போக்கு இருந்ததாக கூறினார். மேலும் அவர் அணிந்திருந்த சுமார் 2 1/2 சவரன் மதிப்புள்ள தங்க செயின் காணாமல் போய்விட்டது என்று கூறினார். நாங்கள் உடனடியாக வீட்டிற்கு திரும்ப வரும்போது எனது மகனை SRM மருத்துவமனையில் சேர்த்துவிட்டதாகவும், அந்த தகவல் தெரிந்தவுடன் அங்கு சென்று பார்த்தோம். அவர் சிகிச்சை பெற்று கொண்டிருந்தார். இது சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலீசார் விசாரித்தபோது எதிரி தாக்கி எனது மகனுக்கு உடல் முழுவதும் இரத்தமாக இருந்த விவரத்தை சொல்லி இருக்கிறேனா என்றால் சொல்லி இருக்கிறேன். போலீசார் விசாரித்தபோது சம்பவ சமயத்தில் எனது மகன் கழுத்திலிருந்த தங்க செயினை பறித்து சென்றதாக சொல்லி இருக்கிறேனா என்றால் சொல்லி இருக்கிறேன். போலீசார் விசாரணையில் நான் வந்து பார்த்தபோது எனது மகனை SRM மருத்துவமனையில் அழைத்து சென்ற விவரத்தை சொல்லி இருக்கிறேனா என்றால் சொல்லி இருக்கிறேன். மேற்சொன்ன எந்த விவரத்தையும் போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றாலும், வழக்கை வலுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 08.08.2023 ஆம் தேதி எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக நடக்காத சம்பவத்தை, நடந்ததை போல பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை- இல்லை.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana,
Judicial Magistrate No.II,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No. 444/2024**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU.

Deposition of witness for : LW-4/PW-4

Name : கௌசிகா

Father/Husband's Name : முருகானந்தம்

Village : மறைமலைநகர்

Taluk :

Calling :

Age : 20

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21.07.2025.

**முதல் விசாரணை–**

கடந்த 08.08.2023 ஆம் தேதி காலையில் நான் வீட்டில் இருந்தேன். எனது அண்ணன் நாங்கள் நடத்தி வரும் கடையில் இருந்தார். நான் சத்தம்கேட்டு வெளியே வந்து பார்த்தபோது ஆஜர் எதிரி நாயை கட்டுப்படுத்த முயற்சிக்கும் தடியால் எனது அண்ணனின் நெற்றிபொட்டில் அடித்தார். அதனால் எனது அண்ணன் உடனடியாக தரையில் விழுந்தார். நான் உடனடியாக ஆஜர் எதிரியிடம் எதற்காக இவ்வாறு செய்தீர்கள் என்று வினவியபோது, அவர் மறுபடியும் எனது அண்ணனை விடாமல் தாக்கி கொண்டிருந்தார். எங்கள் வீட்டுக்கு எதிர் வீட்டில் இருந்த பெயர் தெரியாத பெண்மணி வந்து எதிரியை தடுத்தார்கள். அதன்பிறகு எதிரி எனது அண்ணனை நோக்கி இருடா தேவிடியா பையா என்று கூறிவிட்டு நாயை வீட்டில் விட்டுவிட்டு உன்னை கவனித்து கொள்கிறேன் என்று சென்றுவிட்டார். சற்றுநேரம் கழித்து எங்களது வீட்டின் முதல் மாடியில் வேலை செய்வதற்காக 2 நபர்கள் வந்தார்கள். அவர்களுடன் எனது அண்ணன் மேலே சென்றுவிட்டார்,

அந்த சமயம் எதிரி இரும்புராடு எடுத்துகொண்டு வந்து எங்களது கடையில் ஓடிக்கொண்டிருந்த மின்விசிறியை அடித்து உடைத்தார். நான் அதை தடுத்தபோது என்னையும் கீழே தள்ளிவிட்டு எனது அண்ணனை திட்டியதுபோல் என்னையும் தகாத வார்த்தைகளால் திட்டினார். இந்த சத்தத்தை கேட்டு எனது அண்ணன் வந்துபார்த்தபோது எதிரியும் அண்ணனும் மாறி மாறி சண்டை போட்டுகொண்டனர். அப்போது எதிரி எனதுஅண்ணனை கீழே தள்ளிவிட்டு எனது அண்ணனின் முகத்தில் குத்தினார். பிறகு அருகாமையில் உள்ள பொதுமக்கள் வந்து இருவரையும் பிரித்தனர். பிறகு நான் எனது பெற்றோருக்கு போன் செய்தேன். காயம்பட்டிருந்த எனது அண்ணனை SRM மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். அதற்கு முன்பாக காவல் நிலையத்தில் நடந்த சம்பவத்தை பற்றி கூறிவிட்டுதான் சென்றோம். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

கடந்த 08.08.2023 ஆம் தேதி நான் பள்ளிப்படிப்பு முடித்துவிட்டு விடுமுறையில் இருந்தேன். ஆஜர் எதிரி வழக்கமாக காலையிலும், மாலையிலும் அவரது நாயை நடைபயிற்சிக்கு அழைத்து வருவது வழக்கம் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் என் வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். அதற்குமுன்பு என்ன நடந்ததுஎன்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் எதிரியிடம் ஏன் எனது அண்ணனை அடிக்கிறிர்கள் என்று கேட்டதாக சொல்லி இருக்கிறேனா என்றால் இல்லை. காயம் ஏற்பட்டதாகவும், இரத்தம் வந்ததாகவும் நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எங்களது கடையில் எந்த பொருளும் சேதப்படவில்லை என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக நான் போலீசார் விசாரணையில் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த சம்பவமும் அந்த தேதியில் நடக்கவில்லை என்றாலும், என் அண்ணனுக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும், எதிரி மீது இருந்த முன்விரோதம் காரணமாக, காயம் ஏற்பட்டதாக தனியார் மருத்துவமனையில் பொய்யான

காயச்சான்றிதழ் பெற்று காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது அண்ணன் புகார் கொடுத்ததால் அவருக்கு அனுசரனையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை- இல்லை.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana,
Judicial Magistrate No.II,
Chengalpattu.